இன்னொரு நாட்டை வெல்ல வேண்டுமே தவிர மாநிலத்திற்கு மாநிலம் வெல்வது ஒருமைப்பாட்டிற்கு உகந்தது அல்ல என்று குறிப்பிட்டு இருக்கிறேன். அந்த ஹாக்கி குழு பெடரேஷனுக்கு குதிரைப் பந்தையக் குழுவினர் நிதி அளிக்கும்போது தமிழகம் சார்பில் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டார்கள். இதை பெடரேஷனுக்கு வழங்கி இருக்கிறோம். இது பஞ்சாபை விட அதிக ரூபாய் உதவி செய்ததாக அர்த்தம்.

திரு. சீனிவாசன் குறிப்பிட்டது போல 400 ரூபாய்க்கு மேல் தரக் கூடாது. ஆயிரம் ரூபாய் அவர்களுடைய குடும்ப நிதிக்குத் தரப்பட்டதே தவிர விளையாட்டு வீரர்களுக்கு அல்ல என்று தெரிவித்துக்கொண்டு மீண்டும் ஒரு முறை ஹாக்கி வீரர்களையும் தலைமை வகித்த திரு. ராமசாமி அவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

3. நடைமுறைக் கேள்வி.

லாபியில் ரகசிய காவல் துறை அதிகாரிகள் நடமாட்டமும் பத்திரிகை நிருபர்கள் செய்தி அனுப்புவதில் ஏற்படும் சிரமமும் குறித்து.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன வென்றால் சமீப காலமாகவே நம்முடைய சட்ட மன்றத்தினுடைய லாபியிலே குறிப்பாக பத்திரிகை நிருபர்கள் தங்களுடைய செய்திகளைச் சேகரிக்கிற இடத்தில் சி.ஐ.டி. அதிகாரிகள் பக்கத்திலே நின்றுகொண்டு என்ன, யார், யார் எந்தப் பத்திரிகைக்கு செய்தி அனுப்புகிறீர்கள் என்று கேட்டுக் கொண்டு பக்கத்திலே இருப்பதால் மிக கஷ்டப் படுகிறார்கள். சில நேரங்களிலே ஸ்டேட்மென்டை கையிலே எடுத்துக் கொண்டு போகிறார்கள். ஆகவே, இந்த அவை மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன், அத்தகைய முறைகளை இனிமேலாவது நிறுத்த வேண்டும். அப்படிப்பட்ட சி.ஐ.டி.களை அந்த அறையிலிருந்து விலக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தமாதிரி நிலை இல்லை. தனிப்பட்ட முறையில் ஏதாவது இருந்தால் அதை என்னிடம் சொன்னால் அதற்கான நடவடிக்கை எடுக்கிறேன்.

4. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அறையில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பது பற்றிய வேண்டுகோள்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இருக்கின்ற அறையில் குடிக்கத் தண்ணீர் வசதி இல்லை. மேலவையில் உறுப்பினர்களுக்குத் தனியாக ஒரு அறை இருக்கிறது.

1975 மார்ச் 21] திரு. பெ. சீனுவாசன்

இந்த மாதிரி ஒரு இடம் இங்கே இல்லே. இருக்கின்ற இடத்தை துப்புரவாக வைத்துக்கொள்ள ஒரு பணியாளரை நியமிக்க வேண்டும். குடிக்கக் தண்ணீர் வேண்டுமென்றால் அசிஸ்டெண்ட் செக்ரடரி அல்லது டெபுடி செக்ரடரி ரூமுக்கே செல்ல வேண்டி இருக்கிறது. குடிக்கத் தண்ணீர் வசதி செய்து தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்குத் தகுந்த ஏற்பாடு செய்கிறோம்.

5. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

மனையக மருத்துவர்கள் (ஹவுஸ் சர்ஜன்கள்) வேலைநிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எ. சுப்பிரமணியம் திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர்.

"The serious situation that has arisen because of the token strike on 18th March 1975 by the House-Surgeons in Government Hospitals throughout the State demanding higher stipends and better job opportunities resulting in serious dislocation of hospital work".

என்ற விஷயத்தைப் பற்றி விவாதிக்க ஒத்திவைப்பு தீர் மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி ஒத்திவைப்புத் தீர் மானங்களுங்கான விதிகளின் கீழ் வரும் எனச் சுருக்கமாக விளக்கும்படி முதலில் திரு. ஜேம்ஸ் அவர்களை அழைக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்பு தீர்மானம் 18—3—1975-ம் நாள் சென்னை நகரத்தில் இருக்கின்ற பல்வேறு மருத்துவ மனைகளில், கோயம்புத்தூர், தஞ்சை போன்ற மருத்துவ மனைகளில் பணி புரிகின்ற உறவுஸ் ஸர்ஜன்கள் தங்களுக்குக் கூடுதலாக அலவன்ஸ் வேண்டுமென்றும் அதிக வேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டுமென்றும் பல கோரிக்கைகள் வைத்து ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்து இருக்கிறார்கள்.

(முற்பகல் 10-00.)

மருத்துவர்கள் மருத்துவமனைகளில் இம்மாதிரி வேலை நிறுத்தம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்றாலும் அவர்களை நாம் வேலை நிறுத்தம் செய்யக்கூடிய அளவுக்கு ஆக்கிவிடக் கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.